Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
**C.C.No. 201/2010**

**Deposition of witness for: PW - 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | கருணாநிதி | **Father/Husband Name** | : | அய்யார் |
| **Age** | | | **Calling** | : | |
| **Date** | **:** | **06.10.2025** | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06th day of October 2025.
எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது)
**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தஞ்சாவூர் மாவட்டம், திருவடைமருதூர் தாலுகாவில் காமாட்சிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இந்திய ராணுவத்தில் பணிபுரிந்து ஒய்வு பெற்று மேற்கண்ட முகவரில் ஒய்வில் இருந்து வருகிறேன். நான் விருதுநகரில் உள்ள NCC Camp ல் வேலை செய்துவிட்டு சுமார் 5 நாட்கள் விடுப்பில் எனது ஊரான காமாட்சிபுரத்தில் இருந்து 13.11.2009 ம் தேதிக்கு முதல் நாள் இரவு சுமார் 07.50 க்கு புறப்பட்டு அரசு பேருந்தில் தஞ்சாவூரில் இருந்து திருப்பத்தூர் வரை வந்து மீண்டும் திருப்பத்தூரிலிருந்து மதுரைக்கு மற்றொரு அரசு பேருந்தில் ஏறி பயணம் செய்தேன். 13.11.2009 ம் தேதி காலை சுமார் 04.50 மணிக்கு வெள்ளரிப்பட்டி டிவிஎஸ் டயர் கம்பெனி அருகே சென்றபோது நான் சென்ற அரசு பேருந்தை ஒட்டி சென்ற ஓட்டுனர் சற்று வேகமாக ஒட்டி சென்ற முன்னால் இடது ஓரத்தில் சென்று கொண்டிருந்த லாரிக்கு பின்னால் இடது பக்க லாரியின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அதில் பேருந்தில் இடது பக்கம் சேதம் ஏற்பட்டது. அந்த பேருந்தில் நான் பின் பக்க சீட்டிலிருந்து மூன்று சீட்கள் முன் அமர்ந்திருந்தேன். விபத்தினால் எனக்கு இடது கால் முறிவு ஏற்பட்டது, எனக்கு சுமார் கீழ் வரிசை 6 பற்கள் உடைந்திருந்தது. தற்போதும் எனக்கு இடது காலில் ராடு பொருத்தப்பட்டிருக்கிறது. சுமார் 45 செ,மீ அளவில் ராடு வைக்கப்பட்டுள்ளது. தலையிலும் காயம் ஏற்பட்டிருந்தது. எனக்கு

அருகில் பயணம் செய்த பெண் பெயர் தற்போது ஞாபகம் இல்லை. அவர் மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பயனின்றி இறந்துவிட்டார், மற்றும் என்னுடன் பயணம் செய்த பயணிகளில் சிலர் இறந்துவிட்டனர், நான் அதை பார்த்தேன். அங்கிருந்தவர் ஆம்புலன்ஸ்ற்கு போன் செய்து எங்களை மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர், நான் மேலூர் அரசு மருத்துவமனையில் சுமார் 4 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். பின்னர் பெங்களூரில் உள்ள Air force மருத்துவமனையில் சுமார் 25 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். விபத்து ஏற்படுத்திய மற்றும் நான் பயணம் செய்த பேருந்தின் பதிவெண் எனக்கு தெரியும். TN 63 N 1281 ஆகும். விபத்தில் பேருந்தின் நடத்துனருக்கு காயம் ஏற்பட்டு இறந்து என் இருக்கையில் கிடந்தார். விபத்திற்கு பின்னால் நான் மயக்கம் அடைந்திருந்தேன். மயக்கம் தெளிந்து பார்த்தபோது பேருந்தின் நடனத்துனர் இறந்து கிடந்ததை பார்த்தேன். இதுசம்மந்தமாக நான் சிகிச்சையில் இருந்தபோது மேலூர் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

நான் விபத்து ஏற்பட்ட பேருந்தின் பின்புற படியிலிருந்து எத்தனாவது சீட்டில் அமர்ந்திருந்னேதன் எனறால் பின்புறத்திலிருந்து மூன்றாவது சீட்டில் அமர்ந்திருந்தேன். நான் அந்த சீட்டில் பேருந்தின் ஜன்னல் அருகே அமர்ந்திருந்தேனா அல்லது அடுத்தவாறு அமர்ந்திருந்தேனா என்றால் ஜன்னல் சீட்டில் ஒருவர் அமர்ந்திருந்தார் அவருக்கு அருகே நான் அமர்ந்திருந்தேன். தஞ்சாவூரிலிருந்து நான் வந்ததனால் அதிகாலை வேலை என்பதனால் நான் தூங்கி கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. நான் அமர்ந்திருந்த சீட்டிலிருந்து வாகனத்திற்கு முன்னால் எந்த வாகனம் எவ்வாறு வந்தது என்று என்னால் சொல்ல இயலாது என்றால் சரிதான்.